REGD.No. M. 6311 ★ நனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

ஜெகந்நாதர் தேர் இழுப்பவருக்கு 'மோட்சம்' கிடைக்குமாம்!

கவர்னர் திரிவேதிக்கோ பஞ்சாபில்தான் இடம் கிடைத்தது!

'பூரி ஜெகந்நாதர் தேரை நான் இருமுறை இழுத்திருக்கிறேன்; 'மோட்சலோகத்திற்கு அருகில் இடம் பெறுவதற்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: மார்கழி 20உ புதன் (4-1-56) ★ ★ வெளியூர்: மார்கழி 21உ வியாழன் (5—1—56) [இதழ் 17

மண்டல ஏற்பாடு உருவாகிறது

அறிவொளி நிறுவனங்களாகவே ஆரம்பத்தில் இயங்குமாம்

அரசியல் சட்டம் 263-வது விதி திருத்தப்படுமாம்

இந்தியப் பேரரசிற்கும், மாகாண ஆட்சிகளுக்கும் இடையில் மண்டல மன்றங்களை உருவாக்க வேண்டும்; ஒவ்வொரு மண்டல மன்றத்திலும், அப்பகுதியிலுள்ள மாகாணங்களை இணைக்கவேண்டும்—இவ்வேற்பாடு பற்றிய கருத்தை இந்தியப் பிரதமர் நேரு அண்மையில் அறிவித்தார்.

இப்பொழுது அது உருவம் பெறுகிறது. அவ்வேற்பாட்டிற்கு உயிரளிப்பதற்காக அரசியல் சட்டம் 263-வது விதியில் திருத்தம் செய்யவேண்டியது கட்டாயமாகிறது.

மாகாணங்களுக்கிடையில் குறிப்பிட்ட ஒரு பிரச்சினையில் தீர்க்கமுடியாத சிகல் ஏற்பட்டாலும், மாகாணங்களுக்கும் மத்திய ஆட்சிக்கும் அதேவகையில் பிணக்கு ஏற்பட்டாலும், சில மாகாணங்களுக்குள்ளாகவோ அல்லது மாகாணங்களுக்கும் மத்திய ஆட்சிக்கும் பொதுவாக உள்ள பிரச்சினைகளில் பிணக்கு ஏற்பட்டாலோ, அவைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்கு, குடியரசுத் தலைவர் விரும்பினால் ஒரு அறிவுரைக் குழுவை இடைக்கால ஏற்பாடாக உருவாக்கலாம் என அரசியல் சட்டம் 263-வது விதி கூறுகிறது. ஆனால் நேருவின் மண்டல ஏற்பாடு, ஒன்றாக இல்லாமல் பலவாகவும், நிரந்தரமானதாகவும் இருப்பதாலும், அம்மண்டலங்களுடைய பணியின் தன்மை விரிவாக இருப்பதாலும், மேற்படி விதியை, அதற்கேற்பத் திருத்த வேண்டியது தவிர்க்கமுடியாததாக இருக்கிறது.

மக்கள் சபையின் வரவு-செலவு திட்டக் கூட்டம் வருகிற பிப்ரவரி திங்கள் 15-ந் தேதி துவங்க இருக்கிறது. அதே கூட்டத்தில் மாகாண சீரமைப்பு மசோதாவின் மீதும் விவாதம் நடக்க இருக்கிறது. அப்பொழுதே மண்டல ஏற்பாடு பற்றிய முடிவும், அதற்கான அரசியல் சட்டத்திருத்தமும் நிறைவேற்றப்படுமாம்.

மாகாண புனரமைப்பு மசோதாவிலேயே மண்டல ஏற்பாடு குறித்த விவரமும், அதிகார விளக்கமும் இணைக்கப்பட்டு இருக்குமாம்.

புதிய மண்டல அமைப்புக்கு உருவகம் கொடுக்கும் முயற்சியில், இந்தியப் பேரரசின் உள்நாட்டு அமைச்சர் துறை ஈடுபட்டு இருக்கிறது.

திரு-கொச்சி தமிழர்களை ஏமாற்றும் ஏற்பாடா?

பாதுகாப்பளிக்கப் பனம்பள்ளி தயாராம்!

முதலமைச்சர் வலையில் முன்னாள் தமிழமைச்சர்!

"திரு-கொச்சியைச் சேர்ந்த தென் பகுதியில் வாழும் தமிழர்கள் கேரளத்திலேயே தொடர்ந்து இருந்து வர ஒருப்படுவார்களானால், தக்க பாதுகாப்பளிப்பதாக வாக்களிக்கிறேன்."

இவ்வாக்குறுதியை, திரு-கொச்சி முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன், திருபர்களிடம் தந்துள்ளார்.

"பாதுகாப்பு அளிப்பதாக முதலமைச்சர் வாக்களித்தால், தென் பகுதி வாழ் தமிழர்கள் கேரளத்திலேயே இணைந்திருப்பர்," என, ம. சோ. கட்சி மந்திரியாக இருந்த பி. எஸ் நடராஜப்பிள்ளை அவர்கள், முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் முறையிலேயே மேற்படி வாக்குறுதியை முதலமைச்சர் தந்திருக்கிறார்.

தனது வாக்குறுதியை அடிப்படையாகக்கொண்டு, தான் கூறியபடி, தென் பகுதி தமிழர்கள் கேரளத்திலேயே இருப்பதற்கான ஏற்பாட்டில் முயற்சிக்கும்படி நடராஜப் பிள்ளையை முதலமைச்சர் வேண்டிக்கொண்டுள்ளார்.

சென்னையுடன் இணைந்தால், திரு-கொச்சி தென் பகுதிக்கு கேடாகும்—என்ற உண்மையை நடராஜப் பிள்ளை முடிவாக உணர்ந்து கொண்டதற்காக தான் மகிழ்ச்சியடைவதாகவும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

முதலமைச்சரின் வாக்குறுதி கண்ட பிள்ளையும், பிரச்சினையில் தம்மாலான முயற்சியை மேற்கொள்ளப்போவதாக திருபர்களிடம் கூறினதாகத் தெரிகிறது.

திரு-கொச்சி சட்டசபையில் மாகாணப் புனரமைப்புக் குழு பிரசிசகள் விவாதிக்கப்பட்டபொழுது, நடராஜப்பிள்ளை, 'தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு தமிழர்வாழ் பகுதிகளும் சென்னையுடன் இணைய வேண்டும் என வாதிட்டார். ஆனால், வாக்கெடுப்பில், அப்பகுதிகள் இப்பொழுது உள்ளதே போன்று திரு-கொச்சியில் இருந்து வரவேண்டுமென்று வாக்களித்தனராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலோசித்தனராம் — விவாதித்தனராம்!

சென்னை மாநிலத்தில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் முக்கியத் தொழில்களைக் குறித்து சென்னை அமைச்சர் சுப்பிரமணியம், பக்தவத்சலம் ஆகியோருடன் மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆலோசனை நடத்தினராம்; அரசாங்கச் சார்புடைய முக்கிய அதிகாரிகள் பலரும் ஆலோசனையில் கலந்துகொண்டனராம்.

மேட்டுப்பாளையத்திலோ அல்லது பவானிசாகர் பகுதியிலோ ஒரு காகிதத் தொழிற்சாலையும், சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலையும் ஆரம்பிப்பது பற்றி விவாதிக்கப்பட்டதாம்.

நெசவாளருக்குக் குடியிருப்புக் காலனி

கைத்தறி நெசவாளரின் வாழ்க்கை நிலைமையை அபிவிருத்திச் செய்வதற்காக கூட்டுறவு குடியிருப்புக் காலனிகள் அமைக்கும் ஒரு திட்டத்தின் கீழ், அருப்புக்கோட்டையில் 15 ஏக்கரா நிலப் பரப்பில், நெசவாளருக்கு 200 வீடுகள் கட்டித்தரப்படும்

பிரதமரின் மண்டல ஏற்பாடு

'மாகாண ஆட்சிமன்றங்களின் கருத்தறியப்படவில்லை'

சென்னை நிதி அமைச்சரின் மனக்குறை

"புதிய மண்டல ஏற்பாடு பற்றி இதுவரை சென்னை மாகாண ஆட்சிக்கு, இந்தியப் பேரரசிடமிருந்து எவ்விதத் தகவலும் கிடையாது"

இந்த உண்மையை சென்னை நிதி அமைச்சர் திருபர்களிடம் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"அபிவிருத்தி வேலைகளில் குறிப்பிட்ட மாகாணங்களுக்கிடையே கூட்டுறவை ஏற்படுத்த மண்டல அமைப்புகள் உருவாக்கப்படுவது வரவேற்கத்தக்கதேயாகும்.

நிர்வாக அதிகாரம் எதுவுமில்லாது, வெறும் ஆலோசனை கூறும் அமைப்புகளாகவே மண்டல அமைப்புகள் தற்சமயம் இயங்கிவரும் எனத் தாம் நம்புவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"மண்டல அமைப்புகளிடம் நிர்வாகத்திற்குரிய அதிகாரத்தை ஒப்படைக்கவேண்டும் என்ற ஒரு நிலை ஏற்பட்டே தீருமானால், மண்டல அமைப்புக்களின் பணியை சிலகாலம் கண்காணித்து வந்தபின்பே அது பற்றி சிந்திக்கப்படும். அவ்விஷயமாக, மாகாணங்களும், இந்தியப் பேரரசும் கலந்து பேசி முடிவுகட்டும்" என்று அமைச்சர் அறிவித்தார்.

கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி

மத்திய சர்க்கார் நிதி உதவி

புதுடில்லி, ஜன. 4—

கிராமக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார் மொத்தம் சுமார் ரூ. 8,28,000 மானியங்களும், கடன் தொகைகளும் வழங்க அனுமதியளித்திருக்கிறது.

பனைவெல்லத் தொழிலின் அபிவிருத்திக்காக தேர்—கிராமக் கைத்தொழில்கள் போர்டுக்கு மானியமாக ரூ. 91,000—கடனாக ரூ. 60 000 கிடைக்கிறது.

உயிரிழந்தோர் பட்டியல் உயருகிறது!

சியூயார்க், ஜன. 2—

கிறிஸ்தமஸ் வாரத்தில் சாலை விபத்துக்களில் 600 பேர் மாண்டதையொட்டி அமெரிக்கர் அதிர்ச்சியடைந்திருக்கையிலேயே புத்தாண்டுத் தினத்தன்று சாலை போக்குவரத்து விபத்துக்களில் சிக்கி உயிரிழந்தோர் தொகை 400-க்கும் அதிகமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இவ்வளவு அதிக விபத்து இதுவரையில் ஏற்பட்டதே இல்லையாம்!

இரும்புக் கோபுரத்தில் பெரும் தீ விபத்து

பாரிஸ், ஜன. 3—

உலகிலேயே மிகப் பெரியவைகளில் மூன்றாவதான ஐப்பன் கோபுரத்தின் மூன்றாவது மாடியில் இன்று நீப்பிடித்துக் கொண்டு, 985 அடி உயரமுள்ள அதன் உச்சி வரையில் நீப்பிழம்பு வீசும்பியது. நீயை அணைப்பதற்கு நூற்றுக்கணக்கான நீயணைக்கும் படையினர் தருவிக்கப்பட்டனர்.

உயர்தரப் படிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் ஊக்கம்

இந்திய சர்க்கார் உபகாரச் சம்பளத் திட்டம்

புதுடில்லி, ஜன. 4—

இந்திய சர்க்கார், கல்வியின் பல்வேறு கட்டங்களிலும் பலவிதமான உபகாரச் சம்பளங்களை வழங்க முன்வந்திருக்கிறார்களாம்; கலை, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்வதும், இளம் மாணவர்கள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உயர்தரப் படிப்பைப் படிப்பதற்கு ஊக்கமளிப்பதும்தான் இதன் நோக்கமாம்.

'இறுதி நிமிட தந்திரம் லைகூடாது'

'சாகசப் பேச்சால் நாங்கள் ஏமாறமாட்டோம்'

"இந்த இறுதி நிமிடத் தந்திரம் பயனளிக்காது. இத்தகு சமரசப் பேச்சால் நாங்கள் ஏமாறமாட்டோம்."

இப்பதிலை திரு-கொச்சி த. நா. காங்கிரஸ் தலைவர் சேசமணி திருபர்களிடம் கூறியுள்ளார்.

தமிழ்ப் பகுதிகளைக் குறித்து இதுவரை தி-கொ. த. நா. காங்கிரஸ் பொறுப்பாளர்களை எவரும் அணுகிப் பேசவில்லை என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இந்தியாவில் மின்சார உற்பத்தி நிலவரம்

சென்றவருட செப்டம்பர் மாதத்தில் இந்தியாவிலுள்ள 707 மின்சார உற்பத்தி நிலையங்கள் மொத்தம் 7,176 இலட்சம் கிலோவாட் மணி மின்சாரம் உற்பத்தி செய்தன; அதில் 5,871 இலட்சம் கிலோவாட் மணி மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு விற்கப்பட்டது.

இந்தியை திணிக்க தனி மந்திரிசபை

ஆதிபத்திய வெறியர் தாண்டனின் தூண்டுதல்

நாகபுரி ஜன 1—

"'இந்தி உலகத்திற்கு' வழிகாட்ட இந்தியப் பேரரசில் இந்தி இலாகாவிற்கென ஒரு மந்திரிசபைஇலாகாஇருக்குமானால், இந்தி அசாதாரண முன்னேற்றத்தைப் பெற்றுவிடும்;

"இந்தி முன்னேற்றத்தில் செய்ய வேண்டியுள்ள பெரும் வேலையை மனதில் கொண்டால, இந்தி பரப்பும் வேலையைக் கவனிப்பதற்கென ஒரு தனி மந்திரியை நியமிக்க வேண்டியது மிக அவசியம் என்பதை உணர முடியும்"

என்று, காங்கிரசின் முன்னாள் தலைவரான பி. டி. தாண்டன் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.தின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 4—1—'56 புதன்

எவ்வளவு அலட்சியம்?

'நான் ஒரு பணியில் கலந்து கொள்ளவேண்டிய அவசரத்தில் இருக்கிறேன்; நீங்கள், தொழில்-வர்த்தகத்துறை செயலாளரைக் கலந்து பேசுங்கள்' —இப்படி நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள், அவசர அவசரமாக அரசாங்க அலுவலகத்தைவிட்டு வெளியேறி இருக்கிறார்.

அமைச்சரைக் காணவந்தவர், ஏதோ சலுகைகள் பெறுவதற்காக வந்தவரல்ல; அந்நோக்குடன் வந்தவரிடம் வேண்டுமானால் — பார்ப்பதற்கான அனுமதிகூட மறுத்திருக்கலாம்—அமைச்சர் செய்தது போன்று பேச்சை முறித்துவிட்டு வெளியேறி இருக்கலாம். அதுபற்றி நாம் கவலைகொண்டிருக்கமாட்டோம். அப்போக்கு தவறுடையது என எவரும் கூறத் துணியவும்மாட்டார்.

அமைச்சரைக் காணவந்தவர் வெட்டிப் பேச்சுகளைப் பேசி விதண்டாவாதங்களைக் கிளப்பி, அமைச்சரின் மன அமைதியைக் குலைத்து, எரிவுள்ளம் கொள்ளச் செய்யக் கூடியவரினரும்மல்ல.

தன்னைக் காணவந்தவர் என்ன சேதி கொண்டுவந்திருக்கிறாரோ, எந்தத் தேவைகளைக் கூறி என்னை எந்தவிதத் தொல்லைகளுக்கு ஆளாக்குவாரோ, எந்தவகையான உதவியை நாடி என்னைத் துளைக்க வந்திருக்கிறாரோ — என்றெல்லாம் அமைச்சர் எண்ணிடத் தேவையுமில்லை; வந்தவரின் இயல்பையும் குறிக்கோளையும், நம்மைவிடக் கூடுதலாக கனம் நிதி அமைச்சர் அறிந்தே இருக்கிறவராவார்.

விஞ்ஞான வித்தகர் ஜி. டி. நாயுடு அவர்களைக் குறித்து அறியாதார், தமிழ் நாட்டில் பொருள் அறிவுபடைத்தவர்களிடை ஒருவரும் இருக்க முடியாது. அவர் ஒரு சிறந்த தொழில் நிபுணர். சிறிய பெரிய இயந்திரங்களைப் படைக்கவல்ல பேராற்றல் படைத்திருப்பவர்.

அவர் பெற்றுள்ள விஞ்ஞான அறிவு, தொழில் நுட்பப் புலமை, நூல் அறிவளவில் முடங்கிக்கிடப்பதல்ல; செய்து காட்டும் செப்பற்கரிய திறம் மிக்குடையவர் நண்பர் நாயுடு அவர்கள்.

உலகம் சுற்றி நவீனப் பொறி இயல் பயிற்சி பெற்றிருப்பவர். 'கண் நோக்கின் கை செய்யும்' என்ற மெய்யுரைக்கு நடமாடும் எடுத்துக்காட்டு அவ்வல்லுநர்.

நாயுடு அவர்களின் செயல் திறம், ஜெர்மன் விஞ்ஞானிகளால் பாராட்டப்பட்டுள்ளது. அமெரிக்க விஞ்ஞானிகள் அவர் திறம் கண்டு வியந்தோதி இருக்கிறார்கள். பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் அவர் பொறி இயல் புலமை பார்த்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

மக்களுக்குத் தேவைப்படும் இன்றியமையாதச் சிறிய பெரிய இயந்திர தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்கு, அத்தகு பெரும் செயலை மிக மிகச் சாதாரண குடிசைகளிலிருந்தே திறம்பட செய்து முடிப்பதற்கும் அரியதோர் ஏற்பாடு செய்யவேண்டும் என்பதே, நண்பர் நாயுடு அவர்களின் நீண்ட நாளைய உள்ளக் கிடக்கை—வாழ்க்கைக் குறிக்கோள். குடிசைத் தொழில்களாகவே, இயந்திரக் கருவிகளை பலதாறாகச் செய்து முடிக்கலாம் என்ற தன் உறுதிப்பாட்டை, கால கதியால் ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ளவர்கள் அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும்; உண்மை அறியப்பட்ட பின்னராவது, அமைச்சர்களின் உறக்கம் கலையாதா என்ற நினைப்பில், கோவை பொறி இயல் நிபுணர் உண்மை நிலையை விளக்க, நிதி அமைச்சரை, அவருடைய அரசாங்க அலுவலகத்தில் அணுகி இருக்கிறார்.

ஆனால் அமைச்சரோ, 'வேறு முக்கிய பணி இருக்கிறது; அவசரமாக வெளியே போக வேண்டும்; எனது அலுவலக தலைமை அதிகாரியிடம் வந்த சேதியைக் கூறிடும்' என வெளியேறிவிட்டிருக்கிறார்!

மிகச் சிறிய வானொலி பொறிகளை, குடிசைத் தொழிலாகவே செய்யலாம். ஏழை எளியவர்களும் வாங்கிப் பயன்துய்க்கக் கூடிய, மிகமிகக் குறைந்த விலையில் அப்பொறிகளை விற்கவும் செய்யலாம். இத்தகு தொழில் ஏற்பாட்டை அமைச்சரிடம் கூறி, குடிசைத் தொழில் பற்றிய உண்மை நிலையை அவருக்கு உணர்த்தலாம் எனப் பொறி இயல் புலவர், நிதி அமைச்சரை நாடி இருக்கிறார்.

ஆனால், அமைச்சரோ, தாம்தான் 'கனம்' என்பதை வந்தவருக்கு உணர்த்த வேண்டும் என்ற கருத்திலோ என்னவோ, 'அரசாங்கத் தொழில் துறை அதிகாரியைப் பாரீர்! வந்த விவரத்தைக் கூறீர்!' என, வேறு பணிபுரிய வெளியே விரைந்து விட்டார்!

படித்து வேலையின்றித் தவிப்போர் தொகை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு இருக்கிறது. கல்லாதவர் உலகத்திலும் வேலையின்மைக்குப் பல்லாயிரவர் பலியாகியவண்ணம் உள்ளனர். துக்கமும் திகைப்பும் கலந்தளிக்கும் இந்நிலையில், அதிலிருந்து மீட்சி பெற்று புது வாழ்வு பெற, உண்மையான குடிசைத் தொழில் பற்றிய புத்தறிவு போதிக்கவந்த ஒரு விஞ்ஞான வித்தகரின் அறிவுரை கேட்பது, ஐயம் நீங்கித் தெளிவு பெறுவது, ஒரு பெரும் பணியாகப்பட வில்லை நிதி அமைச்சர் கனம் சுப்ரமணியம் அவர்களுக்கு! அதைவிட வேறு பெரும் பணி இருக்கிறதாம், நிதி அமைச்சர் பெருமானுக்கு!

நண்பர் ஜி. டி. நாயுடு அவர்கள் ஒரு விஞ்ஞானிதானே! அரசியல்வாதியாக இருந்தால் அல்லவா, நமது நிதி அமைச்சரின் அரும்பணிகளை அவர் தெரிந்துகொள்வதற்கு?

சத்தா காலட்சேபத்தைத் துவக்கிவைக்க வேண்டும்! பக்தியின் தன்மை பற்றி பகர வேண்டும்! இராமாயணப் பெருமையை மக்கள் உணரச் செய்யவேண்டும்! இவை அன்றோ நமது நிதி அமைச்சரின் அன்றாடப் பணிகளாக உள்ளது?

இயந்திரக் கருவிகள் ஆக்கப்பட்டால் என்? ஆக்கப்படாமல் தொலைந்தால் என்? அவை குடிசைத் தொழிலாக வளர்ந்தால் என்? குடிசைகள் குட்டிச்சுவராகப் போனால்தான் என்? அனைவருக்கும் பணி புரிய வாய்ப்புக் கிடைத்தால் என்? அனைவரும் வாழ்க்கைப் புயலாலும் கண்ணீர்புனலாலும் சீரழிந்தால்தான் என்? இவை அனைத்திற்கும், நிதி அமைச்சரின் பதவியை அணுகவாவது ஆற்றல் உண்டா?

பதவி ஒன்றைப்பற்றி மட்டுமே அனவரதமும் சிந்துத்துச் சிந்தித்து செயலாற்றிக் கிடக்கும் நிதி அமைச்சரிடம், ஜி. டி. நாயுடு அவர்களின் விஞ்ஞான வித்தை செல்லுமா? எட்டி அறியுமா இனிப்பின் தன்மையை? முத்தின் உயர்வு அதற்குத் தெரியாதே!

கோவை சுப்பிரமணியம், ஒரு 'கன'மாக இல்லாதிருந்தால், நாம் அவரைக் குறித்து ஒரு விநாடிகூட கருதமாட்டோம்! நாம் மட்டுமா? நாட்டு மக்கள் கூடத்தான் கருதமாட்டார்கள்! விஞ்ஞான வித்தகர் கூடத்தான், விஞ்ஞானரீதியில் குடிசைத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டும உபாயத்தைக் கூற, கோவை - சுப்ரமணியத்தையா நாடுவார்? அவர் 'கன' மாக இருப்பதால் அல்லவா, பொறியியல் புலவரிடம் நடந்து கொண்ட விதம் கண்டு, நாமும் 'எவ்வளவு அலட்சியம்?' எனக் கேட்கவேண்டியதாகிறது.

'யுவர் ஆனர்' எனக் காலை பத்து மணி முதல் மாலை ஐந்து மணி வரையில் கூறிக் கொண்டிருந்த நிலை, கனம் சுப்பிரமணியத்திற்கு மீண்டும் திரும்புகின்றபொழுது, நாயுடு அவர்கள்தான் என் அவரை அணுகப் போகிறார்; நாம்தான் ஏன் அவரை இலட்சியப்படுத்தப் போகிறோம்!

'சங்க இலக்கியச் செல்வத்தை வடவர் அறியாதது துரதிருஷ்டம்'

'சங்க இலக்கியங்களை தேவநாகிரி இந்தியில் மொழிபெயர்க்க வேண்டும்'

'ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தலே போதுமானது'

அண்ணாமலைநகர் மாநாட்டின் முடிவு

அண்ணாமலைநகர், டிச. 28—

அண்ணாமலை நகரில் நடைபெற்றுவரும் கிழத்திசை மொழி மாநாட்டில் சங்க இலக்கிய விமர்சனப் பதிப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சிறந்த மொழி வல்லுநரும் மேற்கு வங்க மேல்சபை தலைவராகவும் உள்ள டாக்டர் சுனுதிகுமார் சாட்டர்ஜி, மேற்படி தீர்மானத்தை முன்மொழிந்தார் அவர் தமது பேச்சில், சங்க இலக்கியச் செல்வத்தைக் குறித்து வடநாட்டினர் அறிந்துகொள்ளாமல் இருப்பது துரதிஷ்டமாகுமென்றும், இப்பெரும் பணியினைச் செய்வதற்கு இதுவரை தென்னிந்தியப் பேராசிரியர்கள் முயற்சிக்கவில்லை என்றும், தமிழ்க் கலையின் மையமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வேகமாக உருவாகிவருகிறதென்றும், மாநாட்டில் கலந்துகொண்ட விருந்தினர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் தீர்மானத்தைப் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டார்

பூனா தட்சிண ஆராய்ச்சிக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் மெகந்தலே அவர்களும், ஜலந்தரைச் சேர்ந்த அவுஜா அவர்களும் தீர்மானத்தை வழிமொழிந்தும் பின் மொழிந்தும் ஆதரித்தனர்.

மாநாட்டின் சமஸ்கிருத மொழிப் பிரிவின் தலைவரான பேராசிரியர் சதுர்வேதி, ஆங்கில மொழியில் சங்க இலக்கியங்களை மொழிபெயர்ப்பதுடன், தேவநாகிரி எழுத்தில் இந்தி மொழியிலும் மொழி பெயர்க்க வேண்டுமென்று, அசல் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்தார்.

தேவநாகிரி பதிப்பில் அதிக சிரமம் இருக்கிறது என்றும், ஆங்கில மொழி விமர்சனப் பதிப்பே தற்கால தேவையைப் பூர்த்திச் செய்யப் போதுமானது ஆகும் என்றும் பேராசிரியர் கே. எ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள், திருத்தத்தை எதிர்த்துக் கூறினார்

அலகாபாத் பல்கலைக் கழகப் பேராசிரியர் சட்டோபாத்யாயா, சங்க இலக்கிய ஆங்கில மொழிப் பதிப்பை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிடுவதொன்றே போதுமானது என்றும் அதைக் கொண்டு இந்திப் பதிப்பை வெளியிடுவது வடஇந்தியர்கள் கடமையாகும் என்றும் திருத்தத்தை எதிர்த்துக் கூறினார். திருத்தம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டு, அசல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பீகாரின் நல்வாழ்விற்குப் புதிய முயற்சி

நாசத்தை விளைவிக்கும் நதியை நாட்டிற்கு நலன் தரும் வகையில் மாற்றுவதற்குத் திட்டம்

ரூ. 37 கோடியில் மாபெரும் சாதனை

எவ்வளவு கஷ்டங்களும், எதிர்பாராத தடைகளும் இருந்தாலும், பீகாரில் பாயும் கோசி நதியின் வேகத்தைத் தணிப்பதற்கு இந்திய சர்க்காரால் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; இன்றில்லாவிட்டால் நாளை அதன் வேகம் தணிக்கப்பட்டே தீரும். நாட்டுக்கு நலன் செய்யும் நதியாக அது மாறியே தீரும்

திட்டத்தின் பலனாகப் பீகாரில் 13,97,000 ஏக்காவுக்குப் பாசன வசதி கிடைக்கும்; ஹைட் ரெகுலேட்டர் மூலம் நேப்பாளத்தில் 29,000 ஏக்காவுக்கும், பீகாரில் 2,99,000 ஏகாவுக்கும் பாசன வசதி கிடைக்கும்; கிழக்குக் கால்வாய் மூலம் 18,23,000 ஏக்காவுக்கு மொத்தத்தில் தண்ணீர் வசதி கிடைக்கும்.

இருபுறக் கரைகளில் மேற்குக் கரை 67 மைல் நீளமும், கிழக்குக் கரை 73 மைல் நீளமும் இருக்கும்; மொத்தம் 80 கோடி கன அடி மண் வேலை நடக்கும். இத்திட்டம் முழுவதுக்கும் ரூ. 37·3 கோடி செலவாகும். அணைச் செலவு ரூ 13·27 கோடி; கரைச் செலவு ரூ. 10 67 கோடி.

கால்வாயில் விடுகிற தண்ணீரைக் கொண்டு நீர் மின்சார உற்பத்தி செய்யப்படும்; நான்கு மின்சார நிலையங்கள் ஏற்படுத்தப்படும்; 20,000 கிலோவாட் சக்தி உற்பத்தியாகும்; ஆரம்பத்தில் 10,000 கிலோவாட் சக்தி கிடைக்கும்.

1955 ஜனவரியில் கரை வேலை ஆரம்பமாயிற்று; 1957-ம் ஆண்டு மத்தியில் கரை வேலை பூர்த்தியாகிவிடுமென்று நம்பப்படுகிறது.

அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சுதான் | மக்களுக்குத் தண்ணீர் இன்றியமையாததுதான்; ஆயினும், கட்டுமீறிய வெள்ளப் பிரவாகத்தால் அவர்களுக்குத் தன்பத்தைத் தவிர சுகம் ஏது? கங்கை பிறக்கும் இமயத்தில்தான் கோசி நதியும பிறக்கிறது கங்கைக்கு அது உபநதியும்கூட; ஆனால், கங்கையின் மிதமான போக்கினால் பாசன வசதியும், படகுப் போக்குவரத்து வசதியும் கிடைக்கிறது; ஆனால், கங்கையினும் மிகச் சிறிய நதியான கோசி நதி கடுமையான வேகத்தில் பாய்வதால் மக்களுக்கு நல்ல பலன் கிடைக்க வழியில்லை. அதுமாத்திரமன்றி, அது திடீரெனத் தன பாய்ச்சல் வழியை மாற்றிக்கொள்வதினால் கிராமங்கள் வெள்ளத்தில் அமிழ்ந்து, உயிருக்கும் உடைமைக்கும் பெருஞ் சேதம் ஏற்படுகிறது. சீன நதியான மஞ்சள் நதியைச் 'சீனாவின் துயரம்' என்று கூறுவதானால், கோசியைப் 'பீகாரின் பீடை' என்று சொல்லலாம்.

கோசியின் கொட்டத்தை அடக்குவதற்கு வெகு காலமாகவே ஆராய்ச்சிகளும், பரிசோதனைகளும் நடந்து, திட்டங்களும் வகுக்கப்பட்டுத்தான் வந்திருக்கின்றன. ஆனால், அம்முயற்சிகள் வெற்றி பெற்று பலன் தரவில்லை 1896—97, 1937, 1941, 1946, 1950 ஆகிய பல ஆண்டுகளிலும் மத்திய சாக்காரும், மாநில சாக்காரும் மாநாடுகளை நடத்தியும், நிபுணர்களுடன் ஆலோசித்தும், திட்டங்கள் வகுத்தும் வந்திருக்கிறார்கள்.

இந்தியாவின் மிகப் பழைமையான மூன்று நதிகளில் ஒன்றான கோசி, திபேத்தில் 18,000 அடி உயரத்தில் உற்பத்தியாகி சுமார் 450 மைல் தூரம் ஓடி கங்கையில் கலக்கிறது நேப்பாளத்தில் அது 'சப்த கோசி' என்று கூறப்படுகிறது; அங்கே ஏழு நதிகள் ஒன்றாகி கோசி உருவாகிறது சதரா என்னுமிடத்தில் அது மலை இடுக்கின் வழியாகப் பாய்ந்து சம வெளிப் பிரதேசத்தில் பரவுகிறது

இந்நதி சம்மந்தமான பிரதானப் பிரச்சினை, வண்டல் படியும் பிரச்சினைதான். அந்நதி, பருமணலையும் மண்ணையும் அள்ளி வருவதால் அதன் படுகை மேடிட்டு விடுகிறது. எனவே, அது அடிக்கடி திசை மாறிச் செல்ல நேரிடுகிறது. கோசியில் எப்போதும் தண்ணீர் இருக்கும் குறைந்த பட்சம் விநாடிக்கு 10,000 கன அடி தண்ணீர் வீதம் பாயும்; வெள்ளம் ஏற்பட்டால் 2,50,000 கன அடி தண்ணீர் வீதம் பாயும்; உச்சபட்சமாக 7 இலட்சம் கன அடி முதல் 10 இலட்சம் கன அடி வரையில் பாய்ந்திருக்கிறது.

நீண்ட தூரத்துக்குக் கரை கட்டுவதுதான் நிச்சயமான தடை உபாயமாகக் கருதப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

'ஜனநாயகபோர்வையில் காங்கிரசின் ஏகாதிபத்திய அலங்கோலம்'

'பாட்டாளிகளைப் பழிவாங்குவதுதான் இன்றைய அரசியலாரின் எண்ணமா?'

மாத்தூர் விவசாயத் தொழிலாளர் கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் என்.வி.நடராசன்

மாத்தூர் விவசாயிகளின் அறப்போரில் சிறை சென்ற தோழர் ஆதித்தன் உள்ளிட்ட அனைவரையும் பாராட்டவும், மேலும் 53 பேர் மீதுள்ள வழக்கினை வாபஸ் பெறுமாறு அரசியலாரை வற்புறுத்தவும் 1—1—56 மாலை 7 மணிக்கு, செங்கற்பட்டு மாவட்ட-மாத்தூர் கிராமத்தில் பொதுக்கூட்டம் ஒன்று தோழர் இராசகோபால் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"மாத்தூர் விவசாயத் தொழிலாளர்களின் உரிமைப் போரும், அதனை நடத்தி வெற்றி பெற்ற செங்கற்பட்டு மாவட்ட விவசாயத் தொழிலாளர் சங்கத்தையும், அதன் தலைவர் தோழர் ஆதித்தன் அவர்களையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

"தொழிலாளர் இயக்கப் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள கொள்கைப்படியே மாத்தூர் விவசாயிகள் சங்கம் இயங்கி வருவதைக் கண்டு உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். தொழிலாளர் சங்கங்கள் அரசியல் கட்சிகளுக்கு இரையாகக் கூடாது; தொழிற் பிரச்சினை சம்மந்தப்பட்டமட்டில், தொழிலாளர்கள் தொழிற் சங்கத்தையே உயரியதாகக் கொள்ளவேண்டும். ஒரு தொழிற் சங்கத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு இடையே அரசியலில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் அதனை மனதில் வைத்துக்கொண்டு தாங்கள் சார்ந்துள்ள தொழிற் சங்க விவகாரங்களில் குளறுபடி செய்யக் கூடாது. அதுபோலவே, அத்தகைய எண்ணம் கொண்டோரையும் தொழிற் சங்கங்களை நடத்துவதற்குத் தொழிலாளர்கள் அனுமதிக்கக் கூடாது என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும்.

"எனக்கு முன்பு பேசிய உங்கள் தலைவர் ஆதித்தன் அவர்கள், இச்சங்கம் முற்போக்குடைய எல்லா அரசியல்வாதிகளுடைய உதவியையும் எதிர்பார்த்திருக்கிறது என்றும், ஆனால், எந்த ஒரு கட்சிக்கும் இச்சங்கம் அடிமையாகிவிடாது என்றும், இச்சங்கத்தைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு உள்ள பொதுவான அரசியல் நோக்கமெல்லாம் இன்றுள்ள காங்கிரஸ் ஆட்சிமுறையை அகற்றி பொறுப்புள்ள அரசாங்கத்தை இயங்கச் செய்வது என்ற ஒரே கொள்கையைத் தவிர வேறில்லை என்றும் தெரிவித்தார். செங்கற்பட்டு விவசாயத் தொழிலாளர் சங்கம் இந்த எண்ணத்தில — உறுதியில திட்டவட்டமாயிருக்க வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும்.

"அடுத்தபடியாக, மாத்தூர் விவசாயிகளாகிய நீங்கள் சாதாரண சம்பள உயர்வுக்காகப் பட்ட கஷ்ட-நஷ்டங்களையும், அரசியலாரின் அடக்குமுறைகளையும் இங்கே விளக்கிக் கூறப்பட்டது. இன்று நாட்டை ஆளும் சர்க்கார் நாகரீகமுள்ளதாயிருந்தால் இப்பிரச்சினையை இவ்வளவு பெரியதாகியிருக்காது.

"நிலப்பிரபுக்களுக்கும், உழைப்பாளர்களுக்கும் இடையே வீண் தகராறை வளர்ப்பதற்கு யாரையாகிலும் முதல் குற்றம் சாட்ட வேண்டுமானால் அரசாங்கத்தாரைத்தான் கூறவேண்டும்.

"மாத்தூர் விவசாயிகளாகிய உங்களிடம் மிராசுதாரர்கள் என்போர் ஒரு சமரச முடிவுக்கு வந்த பின்னர் அதன்படி யார் நடக்காவிட்டாலும் அவர்களைத் தண்டிக்க வேண்டும்; அதுதான் நாகரீகமான சர்க்காரின் கடமையுமாகும்; ஆனால், மாத்தூரில் நடைபெற்றிருப்பதோ மிக விசித்திரமாயிருக்கிறது.

"அரசியலார், நிலப்பிரபுக்களுக்குப் பாதுகாப்பளித்து, உழைப்பாளர்கள்மீது அடக்குமுறையை ஏவியிருக்கிறது. 144 தடை உத்திரவு மூலம் உழவர்களின் குரலையே அடைக்க முனைந்தது. யார் நியாயப்படி நடந்து செய்யப்பட வேண்டுமோ அவர்களுக்கு அபயம் அளித்து, யாருக்கு அபயம் அளிக்க வேண்டுமோ அவர்களுக்கு அபாயத்தை உண்டாக்கியிருக்கிறது—காங்கிரஸ் சர்க்கார்! இதற்குத்தான் குடியரசு ஆட்சி என்று பெயராம்! காங்கிரசாரின் சமரசநீதியின் இலட்சணம் எந்த அளவுக்கு இருக்கிறதென்பது புரிகிறதல்லவா? இப்பேர்ப்பட்ட ஆட்சி நீடிக்கவும் வேண்டுமா?

"எனினும் நீங்கள் அனைவரும் சங்கத்தின் அடிப்படையில் கட்டுக்கோப்பாகயிருந்ததால், அரசாங்கம் இறங்கிவந்து பேரம் பேசியது. இந்தச் சிறு கிராமத்தில் மட்டும் 33 தாய்மார்கள் உள்ளிட்ட 199 பேர் அடக்குமுறைக்கு ஆளாகியிருக்கிறார்களென்றால் அரசாங்கம் குனிந்துகொடுத்துத்தானே தீர வேண்டும்? உங்களின் கோரிக்கைகளில் வெற்றி பெற்றுள்ள நீங்கள் இந்த அளவோடு உங்கள் பிரச்சினை தீர்ந்து விட்டதாகக் கருதக்கூடாது.

"மிராசுதார் என்பவர்களுக்கு 60 சதவிகிதம் — உழைப்பாளர்களாகிய உங்களுக்கு 40 சத விகிதம் என்ற முறையே மாறி, உங்களுக்கு தினசரி—அல்லது மாதச் சம்பளம்போல கொடுக்கப்பட வேண்டும். விவசாய நிலம் அனைத்தும் அரசியலாரின் உடைமையாக ஆக்கப்பட்டு உழைப்பவருக்கே அந்நிலங்களில் பணிபாற்ற உரிமையுடையதாக ஆக்கப்பட வேண்டும்.

"ஒரு மிராசுதாரருக்கு 15 ஆயிரம் ஏக்கர், மற்றொருவருக்கு 10-ஆயிரம் ஏக்கர் — இரண்டாயிரம் ஏக்கர் என்று இப்படியாக விவசாய நிலங்களை உழைக்காத ஒரு கூட்டத்தார்—அதிலும் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களிடம் அடக்கப்பட்டிருப்பது நீதிதானா? எனவே, விவசாயத் தொழிலாளர் பிரச்சினை ஓரளவாவது ஒழுங்குபட தீரவேண்டுமானால், நிலமனைத்தும் பொதுவுடைமையாகி, அரசியலாரின் நேரடித் தொடர்பில் சம்பள விகிதத்தில் உழுது பயிரிட தொழிலாளர்களுக்கு ஆவனசெய்ய வேண்டும். அதற்குப் பதிலாக வேறு எந்த வகையாலும் விவசாயத் தொழிலாளர்களின் அவலநிலை தீராது.

"மற்றும், இந்த ஊரிலுள்ள மிராசுதாரர்களுக்கு மட்டுமின்றி பொதுவாக நிலப் பிரபுக்கள் என்று கூறிக்கொள்ளும் வர்க்கத்தினருக்கும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்துவரும் இன்றைய காங்கிரஸ் சர்க்காருக்கும் ஒன்று கூறுவேன்—ஏறத்தாழ 500-க்கு மேற்பட்டிருந்த சமஸ்தானாதிபதிகள் தங்களின் பழைய பெருமையையும், உரிமையையும் விட்டொழித்து, இன்று கவர்னர்களின் நிலைக்கு அவர்கள் இறக்கப்பட்டிருக்கிறார்களென்றால், நிலப் பிரபுக்களும், மிராசுதாரர்களும் மட்டும் தங்களின் பழைய 'பந்தா' பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூப்பாடு போடுவது நேர்மைதானா? இந்த மிராசுதாரர்களும் — ஜமீன்தாரர்களும் மூவாயிரம், நாலாயிரம் ஏக்கர் என்று நிலஉடைமை பெற்றதை நாடறிந்ததுதானே! உழைத்துச் சம்பாதித்ததல்லவே—வெள்நாட்டிலிருந்து வந்தவர்களுக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்ததற்காகக் கொடுக்கப்பட்ட பரிசு என்றுதானே நாட்டுச் சரித்திரம் கூறுகிறது. எனவே, காலத்தை அனுசரித்து மிராசுதாரர்களே மனமாற்றம் அடைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"உழைப்பாளர்களின் உரிமையைப் பறிப்பதற்கு அரசியலாரின் துணையை எதிர்பார்த்து நிற்பது பயன்படாது. அதைவிட உழைப்பாளர்களிடம் மனம் விட்டுப் பேசி, அதுபோலவே நடைமுறையிலும், வஞ்சகமின்றி ஆவன செய்வதே அறிவுடைமையாகும். சர்க்காரின் போலீஸ் பலத்தை நம்பியே மிராசுதாரர்கள் வாழலாம் என்று கருதுவது பைத்தியக்காரத்தனமாகும். அதைவிட உங்களுக்காக உழைக்கும் உத்தமர்களிடம் நேரில் பேசுங்கள்; பழைய வரட்டு ஜம்பந்தை மனதில் எண்ணி, பாட்டாளிகளின் வேதனையைக் கிள்ற வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"நீங்கள் கடந்த மூன்று மாத காலமாய்ப் போராடி தினச் சம்பளப் பிரச்னையில் வெற்றி பெற்றது மட்டுமல்லாமல் தினசரி எட்டு மணி நேரம்தான் வேலை என்ற உரிமையும் பெற்றிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

மாத்தூரிலுள்ள விவசாயிகளின் மீதுள்ள வழக்கை மட்டும் ரத்து செய்துவிட்டு உங்களுக்காகப் பணியாற்றிய தோழர் ஆதித்தன் அவர்களையும், அடுத்த கிராமங்களிலிருந்து உங்களுக்குத் துணைபுரிய வந்த 53 தொழிலாளர்களையும் வெளியூர்க்காரர்கள் என்ற பேரால் வழக்கு தொடுத்து தண்டிக்க முனைந்துள்ள சென்னை அரசாங்கத்தின் பிற்போக்குத்தனத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன். இருசாராரும் ஒரு சமரச முடிவுக்கு வந்தபிறகு எல்லோருடைய வழக்குகளையும் வாபஸ் பெறுவதுதான் அறிவுடைமையும் நேர்மையுமாகும். தேசியப் போராட்டத்தில் ஆங்கிலேய ஆட்சியினர் இதுபோன்ற நாகரீகமான முறைகளைக் காங்கிரஸ்காரர்கள் விஷயத்தில் கையாண்டிருக்கின்றனர். ஆனால், அதே காங்கிரஸ்காரர்கள் ஆட்சி பீடமேறியுள்ள இன்று — உழைப்பாளர் பிரச்சினையில் கூட அந்த ஓரளவு நேர்மைப் புத்தியைக் காட்ட மனம் வரவில்லை. ஆனால், இந்த ஆட்சிக்குப் பெயர் மட்டும் மக்கள் ஆட்சியாம்!

"எனவே, உங்கள் கோரிக்கைகளில் சிலவற்றில் வெற்றி பெற்றமை மட்டும் போதாது. அரசியலார் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கடைப்பிடித்து, தொழிலாளர்களுக்கிடையே மித்திர பேதத்தை உண்டுபண்ணும் வகையில் சிலரின் வழக்கை வாபஸ் பெறுவதும் அதே சமயத்தில் இன்னும் 53-பேர்மீது வழக்கைத் தொடுப்பதுமான அநீதியை அகற்ற நீங்கள் கட்டுக்கோப்பாக யிருந்து ஆவன செய்யவேண்டும்.

"இந்தச் சமயத்தில் சென்னை சர்க்காருக்கும் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். வெள்ளையர்கள் பலமுறைப் பயன்படுத்தித் துருப்பிடித்துப்போன பிரித்தாளும் சூழ்ச்சியை — பாடுபட்டு உழைக்கும் ஏழைகளின் பிரச்சினையில் பயன்படுத்துவது நேர்மையாகாது; அது வெற்றியும் பெறாது; எனவே, மாத்தூர் விவசாயிகளின் அறப்போரின் காரணமாக இன்னும் 53 பேர் மீதுள்ள வழக்கை உடனே வாபஸ் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்; அதன்படியே விரைவில் வாபஸ் பெறுவார்களென்று நம்புகிறேன்.

"ஒருக்கால் சர்க்கார் வீண் பிடிவாதத்தில் இறங்கி, இத்தொழிலாளர்களின் கட்டுப்பாட்டைச் சிதைவுறச் செய்துவிடலாம் என்று எண்ணுவார்களேயானால், மாத்தூர் விவசாயத் தொழிலாளர்களின் உரிமைக்காக இன்ற அவர்கள் துணைபுரிய திராவிட முன்னேற்றக் கழகம் பின்வாங்காது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இப்பிரச்சினையை மேலும் வளர்க்காமல், உழவர்களின் உரிமையை மதித்து நடக்குமாறு மீண்டும் அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"விவசாயத் தொழிலாளர்களே! திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களின் சக்தியைப் பயன்படுத்தி அதன் கொள்கையை வளர்க்கும் செயல்களில் ஈடுபட்டது கிடையாது என்பதை உங்கள் சங்கத் தலைவர் ஆதித்தன் அவர்களும், ஏனையோரும் நன்கு அறிவர். அதுபோலவே செங்கற்பட்டு விவசாயத் தொழிற்சங்கத்தின் நேர்மையான நடவடிக்கைகளுக்கு தி. மு. கழகம் தனது ஆதரவைத் தரும் என்பதோடு, குறிப்பாக இப்பகுதியிலுள்ள தி. மு. கழகம் உங்களுக்குத் துணையாய் இருந்துவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"நீங்கள் எதிர்காலத்தில் பெறவிருக்கும் உரிமைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கவேண்டுவது உங்கள் தொழிற்சங்கத்தைப் பலப்படுத்துவதேயாகும். நீங்கள் ஒன்றுபட்டிருந்ததினால்தான் இந்த வெற்றிகளைப் பெறமுடிந்தது என்பதை மறந்துவிடவேண்டாம். எனவே, எந்த அரசியல் கட்சியானாலும் அவைகளின் ஒத்துழைப்பை நீங்கள் பெறவேண்டுமேயன்றி அக்கட்சிகளின் ஆதிக்கத்திற்கு உங்கள் சங்கம் இரையாகி விடக்கூடாது என்பதை மீண்டும் நினைவூட்டி இத்தொழிற்சங்கத்தை நடத்துவரும் உங்கள் தலைவராகிய ஆதித்தன் அவர்கள், அபராதத் தொகையைக் கட்டாமல் சிறைத் தண்டனை ஏற்ற உறுதியை மனப்பூர்வமாகப் பாராட்டுவதுடன், அவரின் தலைமையில் செங்கற்பட்டு மாவட்ட விவசாயத் தொழிலாளர் சங்கம் மேலும் வளரவேண்டுகிறேன். இச்சங்கம் மற்ற மாவட்டங்களிலுள்ள விவசாயத் தொழிலாளர் சங்கத்திற்கு வழிகாட்டியாகவும் அமையவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். மீண்டும் உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைக் கூறி விடைபெற்றுக் கொள்கிறேன்."

பின்னர் தோழர்கள் என். ஜீவரத்தினம், எழுமலை, பொன்னுசாமி, மா. கி. தசரதன் ஆகியோர் பேசிய பின் கூட்டம் இரவு 11-30 மணிக்கு முடிவுற்றது.

தவக்கத்தில் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. விவ

(4-ம் பக்கம் பார்க்க)

'பெண்கள் மட்டுமே நகர சபை உறுப்பினர்களாக இருக்கவேண்டும்'

'ஆற்றலும், சிக்கனமும் தெரிந்தவர்கள் அவர்கள்தான்!'

"அடுத்த 5 ஆண்டுகளுக்கு இந்த நகரசபையில் பெண்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நகரசபை என்பது ஒரு பெரிய வீடு; அந்த வீட்டைத் திறமையாகவும், சிக்கனமாகவும் நடத்தப் பெண்களால் முடியும் என்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவே இவ்வாறு செய்ய வேண்டுமெனக் கூறுகிறேன்; நகரசபை நிர்வாகத்திலும் பெண்களுக்கு அதிகப் பங்கு அளிக்கப்பட வேண்டும்."

—இவ்வாறு, அனைத்திந்திய மாதர்கள் மாநாட்டுக்கு வந்திருக்கும் அதன் தலைவர், பிரதிநிதிகள் ஆகியோருக்கு மங்களூர் நகரசபை ஒரு வரவேற்பளித்தபோது, மாநாட்டின் தலைவியும், இந்திய அரசாங்க வெளிவிவகாரத் துறை பாராளுமன்றச் செயலாளருமான திருமதி லட்சுமி மேனன் வரவேற்புக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

கிளைக் கழகச் செயலாளர்களுக்கு!

★

உறுப்பினர் சேர்க்கும் பணியை நிறைவேற்றிவருகிறீர்களா?

★

1956 ஜனவரி 31-ம் நாள் வரைதான் உறுப்பினர் சேர்க்கும் காலமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவூட்டுகிறோம்

எனவே உறுப்பினர் சேர்க்கும் தாள்களைப் பெற்றிருப்போர் உடனே அதனை நிறைவு செய்து தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் உறுப்பினர் சேர்க்கும் தாள்கள் வேண்டுவோர் மாவட்டக் குழுவின்மூலம் பெற்றுக்கொள்ளவும்.

—தி. மு. க. தலைமை நிலையம்

தலைமைக் கழகச் செய்தி

நடைபாதை மீது கைவண்டித் தொழிலாளர்களின் மறியல்

சென்னை துறைமுக எல்லைக்குள் வேலை தர மறுத்ததின் எதிரொலி

சென்னை, ஜன. 4—

சென்னைத் துறைமுக எல்லைக்குள் கைவண்டிகளுக்கு அடியோடு தடை விதிக்கப்பட்டிருப்பதின் விளைவாகக் கைவண்டிக்காரர்கள் பலர், நேற்று துறைமுகத்திற்கு எதிரிலுள்ள நடைபாதைமீது உட்கார்ந்துகொண்டு 'மறியல்' நடத்தியுள்ளனர்; மாட்டு வண்டிகள் துறைமுகத்திற்குள் செல்லாதவாறு அவர்கள் தடுத்ததாகத் தெரிகிறது.

இதன் விளைவாகத் துறைமுகத்திற்குள்ளிருந்து சாமான்கள் அப்புறப்படுத்தும் வேலை பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது; ஆனால், எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டது என்பதை வெளியிட அதிகாரிகள் மறுத்துவிட்டனராம்.

சர்க்கார் காரியாலயத்திற்குச் சென்று தங்களுடைய குறைகளை தொழிலாளர் இலாகா அமைச்சரிடம் எடுத்துக் கூறுவதற்காகத் தொழிலாளர் தங்களுடைய வண்டிகளுடன் இன்று காலை சென்றனராம்.

பாதிக்கப்பட்டுள்ளோர் எவ்வளவு பேர் என்பது சரியாகத்தெரியவில்லை என்றாலும், வண்டிக்கு நான்கு பேர் என்ற கணக்கில், ஏறக்குறைய 1,000 பேர் வேலை இழந்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

பிரான்சின் அரசியல் நிலைமை மோசமாகிறது?

தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பலம் கிடைக்கவில்லை

நிலையான மந்திரி சபை ஏற்படாதென அச்சம்

பிரான்சின் அரசியல் நிலைமை, தேர்தலுக்கு முன்பிருந்ததைவிட மோசமாக இருக்கிறதாம்! இப்போது நடைபெற்ற தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பலமிருப்பதாகத் தெரியவில்லை; எனவே, பிரான்சில், அரசியல் முட்டுக்கட்டை ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாம்.

பிரெஞ்சு தேசிய அசெம்பிளித் தேர்தலில் கம்யூனிஸ்டுகளும், தீவிர வலதுசாரி ஆதரவாளரும் மொத்தமுள்ள இடங்களில் மூன்றிலொரு பாகத்தைத்தான் கைப்பற்றியுள்ளனர்.

புதிய சர்க்கார் அமைக்க வேண்டுமானால், இடதுசாரி மிதவாதிகளும், வலதுசாரி மிதவாதிகளும் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுசேர வேண்டும்; அப்போதுதான், மொத்தமுள்ள 626 இடங்களுக்கு 338 பேர் கொண்ட பலம் கிடைக்கும்; இல்லையேல், தீவிரக் கட்சியில் ஏதாவது ஒன்றைத் தங்களுடன் கூட்டு சேருமாறு அக்கட்சியினர் அழைக்க வேண்டியிருக்கும்.

பிரதமர் பதவிக்குப் போட்டியிடும் மெண்டே பிரான்ஸ் கட்சிக் கூட்டுக்கும் (இடதுசாரி மிதவாதிகள்), பிரதமர் பாரே கட்சிக் கூட்டுக்கும் (வலதுசாரி மிதவாதிகள்) அசெம்பிளியில் அதிக பலம் கிடைக்குமெனத் தோன்றவில்லை; இந்த நிலைமையினால், பிரான்சில் சாதாரணமாகவே நிலையற்ற முறையில் இருக்கும் மந்திரி சபை, இனியும், நிலைத்து நிற்பதற்கு வழியில்லை என்று அஞ்சப்படுகிறது.

இத்தேர்தலில், பிரதமர் எட்கார் பாரேயும், மெண்டே பிரான்சும் வெற்றி பெற்றுள்ளனர்.

'உணவு உட்கொள்ளுவதில் ஒருமைப்பாடு இல்லை'

'வடவரும்-தென்னவரும் தனித்தனி வகைகளைத் தேடுகின்றனர்'

'ஒரே வகை உணவுகொள்ள ஏற்பாடு வேண்டும்'

வடநாட்டு மந்திரியின் ஆசை!

சென்னை, ஜன. 3—

"இந்தியர்கள், சற்று அதிகமான சுயநலப் போக்குடையவர்கள்; அதிலும், உணவைப் பொறுத்து அதிகமாகத் தனித் தனிப் போக்குடையவர்களாயிருக்கிறோம்; உண்மையாகவே அமைதியடைந்த ஒரு நாட்டில் உணவு, உடை, பழக்க வழக்கங்கள் இவற்றில் ஒரு ஒருமைப்பாடு இருக்கவேண்டும்."

என்று, மத்திய சர்க்கார் உணவுத் துறை அமைச்சர் அஜித் பிரசாத் ஜெயின் குறிப்பிட்டிருக்கிறார்.

அகில இந்தியப் பெண்கள் உணவுக் 'கவுன்சில்'ன் சென்னை மாகிலக் கிளையினர் தந்த விருந்து ஒன்றில் கலந்துகொண்ட அவர், தனக்குத் தரப்பட்ட கோதுமையினாலான பலகாரங்கள் சிலவற்றைச் சாப்பிட்டுவிட்டு, தென்னாட்டின் மதம், மொழி, இனம், நாடு முதலிய எல்லைகளைத் தாண்டி நிற்கும் பொதுநோக்கு குறித்துப் பாராட்டிப் பேசினாராம்.

மேலும் அவர், வடநாட்டிலும்—குறிப்பாக டெல்லி, மற்றும் சில பெரிய நகரங்களிலும் தென்னாட்டுப் பலகாரங்கள் பிரபலமாகியிருப்பதாயும் கூறினாராம்.

"அன்னபூர்ணா போன்ற உணவு விடுதிகள், வடநாட்டு-தென்னாட்டு உணவுகளைக் கலந்து பரிமாற முடியும்; மேலும், பெரிய நகரங்களிலேனும் இம்மாதிரி விடுதிகள் மிக மிக அவசியம்; ஏனெனில், உணவு விஷயத்தில் வடநாட்டவரும்—தென்னாட்டவரும் தனித் தனிப் போக்குடையவர்களாயிருக்கிறோம்" என்றும் ஜெயின் 'ஏக இந்திய ஒற்றுமை' உருவாக்கத்திற்கு யோசனை (!) சொன்னாராம்.

"இந்தியா போன்ற ஒரு முற்போக்கு நாட்டில் சாதாரண மக்களுக்கும் — தொழிலாளர்களுக்கும் நல்ல சுத்தமான உணவு தயாரித்துத் தருகிற வேலைத் திட்டங்கள் மாணவர்களுக்கு இருக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தாராம்.

புயல் நிவாரண நிதி சிறப்புக் கூட்டம்

★

7—1—56 காலை 9 மணிக்கு, ஆரணி (வட ஆற்காடு) நேஷனல் தியேட்டரில், போளூர் கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணாதுரை, ப. உ. சண்முகம் ஆகியோர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

6—1—56 மாலை 6½ மணிக்கு, சென்னை—முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றத்தில் தோழர் கா. வி. இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெறும். 'உரிமை' எனும் பொருள் பற்றி மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை 10-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்—ஆதரவாளர்களுக்கு

1—1—56 முதல், சென்னை 10-வது வட்ட தி. மு. கழத்திற்கு, எண் 4, சண்முகராயன் சந்தில், (தி. மு. கழகம், தோழமைக் கழகப் பணிமனை) உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் பதிவு செய்து கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

15,000 மக்கள் பரதவிப்பு

தீயினால் ஏற்பட்ட விளைவு

இரக்கூன், ஜன. 3—

மத்தியதர வகுப்பினர் பிரதேசப் பகுதியில், கோரமான தீ விபத்தொன்று ஏற்பட்டதால், 15,000 பேர் வீடிழந்தனர்; 5 குழந்தைகள் மாண்டன.

மூன்றில் இரண்டு பங்கு இந்தியர்கள் வசித்துவந்த 2,500 மூங்கில் வீடுகள் நாசமாகிவிட்டன; ரூ. 13 இலட்சத்திற்குமேல் நாசம் ஏற்பட்டன.

தீயணைக்கும் எஞ்சின்கள் விரைந்து வந்தும், போதிய தண்ணீர் கிடைக்காததால் சிரமமான நிலை ஏற்பட்டுவிட்டதாம்.

பீதியடைந்த மக்கள் அங்குமிங்கும் சிதறி ஓடியதில் ஒரு சிறுமியும், 4 சிறுவர்களும் மிதிக்கப்பட்டு மாண்டனர்; பலர் காயமடைந்தனர்.

'உருவான—ஜனநாயக ரீதியான எதிர்க் கட்சி வேண்டும்'

ஜெயப்பிரகாஷ் நாராயண் கருத்து

மதுரை, ஜன. 2—

"உருவான—ஜனநாயக ரீதியான எதிர்க் கட்சி ஒன்று ஆளும் கட்சிக்கு இருந்தாக வேண்டும்; இல்லாவிட்டால், எதிர்காலத்தில் ஜனநாயகம் ஆபத்திற்கு இரையாகிவிடும்.

"ம. சோ. கட்சியைத் தவிர வேறெந்தக் கட்சியும் உருவான ஜனநாயக எதிர்க் கட்சியாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சியை ஒரு உருவான எதிர்க்கட்சியாகக் கொள்ள முடியாது; இப்போது அவர்கள் சந்தேகமில்லாமல் அமைதியான வழிகளையே பின்பற்றி வருகிறார்கள். எத்தனை நாளைக்கு அவர்கள் இப்படி இருப்பார்கள் என்பதை வரலாறுதான் கூற முடியும்.

"மாஸ்கோவிலிருந்து நடத்தப்படுகிற சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கம், எந்த ஒரு நாட்டுக் கம்யூனிஸ்டும் எல்லா நேரத்திலும் ஜனநாயகத்திற்குப் புறம்பான வழிகளைக் கைவிட்டுவிட வேண்டும் என்று ஊக்குவிக்கவில்லை"

என்று, ஜெயப்பிரகாஷ் நாராயண், ம. சோ. கட்சி ஊழியர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'உள்ளத்தில் வைத்திருப்பதைவிட வெளியிலெடுத்துச்சுழற்றுவதுமேல்'

காந்தியார் கூறியதை விஞ்ஞானிகளுக்கு மேற்கோளாகக் காட்டுகிறார் நேரு!

ஆக்ரா, ஜன. 2—

"அணுகுண்டுகளையும், நீர்வளிக் குண்டுகளையும் பிரயோகித்தால் மிகவும் அபாயகரமான விளைவுகள் ஏற்படும் என்பது உண்மையே; ஆனால், அவற்றைவிட அபாயகரமான அணுகுண்டுகளை நமது உள்ளத்திலும், இருதயத்திலும் வளர்த்து வருகிறோம்; ஆகவே, முதலில் நமது உள்ளத்தில் உள்ள அணுகுண்டுகளை நாம் அகற்ற வேண்டும்.

"காந்திஜி ஒரு சமயம் சொன்னார்:—'உள்ளத்திலே கத்தியை வைத்துக்கொண்டிருக்காதே; அதை அகற்றிவிடு; உள்ளத்திலே கத்தியை வைத்து வளர்ப்பதைவிட அதை வெளியே எடுத்துச் சுழற்றுவது நல்லது; மனத்திலும் உள்ளத்திலும் பயங்கரமான ஆயுதங்களை வைத்து வளர்ப்பதால் உங்களையும் கெடுத்துக் கொள்வதுடன் பிறரையும் கெடுக்கிறீர்கள்'—என்று!"

இவ்வாறு, பிரதமர் நேரு 43-வது விஞ்ஞான காங்கிரஸ் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் சொன்னார்:—

"இப்பொழுது உலகின் புகழ் வாய்ந்த விஞ்ஞானிகளின் உள்ளத்தில் பெரியதோர் போராட்டம் ஆரம்பமாகியிருக்கிறது—அதாவது தமது திறமையை உலகின் அழிவுக்கும் நாசத்திற்கும் பயன்படுத்துவது தர்மமா—என்று அவர்களே தமக்குள் தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்துவிட்டனர். அத்தகைய விஞ்ஞானிகள் நல்லவர்கள்; இருதயம் உள்ளவர்கள்; தமது செய்கைகளினால் உலகம் பாதிக்கப்படும் என்று உணருகிறவர்கள்."

இம்மாநாட்டில், இந்தியா முழுவதிலிருந்தும் 1 200 பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்கின்றனர்; அயல்நாடுகளிலிருந்தும் 50 பிரதிநிதிகள் கலந்துகொண்டிருக்கின்றனர். இந்த மாநாடு 7 நாள் நடைபெறும்.

தேயிலை ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டதாக அறிவிப்பு

தேயிலையின் ஏற்றுமதி வரியைத் திர்மானிப்பதற்காக, பவுண்டு ரூ. 3—4—5 ஆக இருந்த தேயிலையின் விலையை பவுண்டு ஒன்றுக்கு ரூ. 3—1—5 என்று இந்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கிறதாம். இந்த விலை விகிதப்படி, பவுண்டுக்கு எட்டு அணாவாக இருந்த ஏற்றுமதி வரி இப்பொழுது ஆறு அணாவாகக் குறைக்கப்படுகிறது.

எஸ். ஆர். எம். யூ. தஞ்சாவூர் கிளைத் திறப்பு விழா

★

7—1—56 மாலை 6 மணிக்கு, தஞ்சாவூர், கீழவாசல் பழைய மாரியம்மன் கோவில் ரோடு, 4377/81 எண்ணுள்ள கட்டிட மேல் மாடியில், மத்திய சங்கத் தலைவர் தோழர் எஸ். இராகவானந்தம் தலைமையில் நடைபெறும்.

ஜெகந்நாதர் தேர்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிலாக, நான் பஞ்சாபிலேயே இடம் பெற்றேன்."

இச்சுவையுடைய கருத்தை, ஆந்திர கவர்னர் திரிவேதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஜெகந்நாதர் தேரை மும்முறை இழுப்பவர்கள் 'மோட்சலோகம்' சேர்ப்பிக்கப்படுவர் என்ற நம்பிக்கை ஒரிசா மாகாணத்தில் இருந்துவருகிறதாம்; அந்த நம்பிக்கையின் பொருளற்றத் தன்மையை ஆந்திர மக்களுக்கு உணர்த்தும் கருத்துடன், மேற்கூறியபடி விஜயவாடாவில் கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார்.

பீகாரின் நல்வாழ்விற்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நீண்ட தூரத்துக்கு இரு புறமும் கரை கட்டுவதால் காலப்போக்கில் ஆபத்து அதிகரிக்கத்தான் செய்யும் என்று மத்திய நீர் மின்சாரக் கமிஷன் கருதியது. சத்ரா மலை இடுக்கில் அணை கட்டுவது, நதியைச் சரியான பாதையில் திருப்பிவிடுவது முதலிய பிரச்சினைகள் பற்றி ஆராய வேண்டுமென்று அது முடிவு செய்தது.

1946-ல் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதைப் புனர்பரிசீலனை செய்தபின், சர்க்கார் மற்றொரு கமிட்டியை நியமித்து மாற்றுத் திட்டம் வகுத்தார்கள்; அந்தத் திட்டம் மத்திய நீர் மின்சாரக் குழுவின் பரிசீலனைக்கு வந்தபின், அது ஏற்றதல்ல என்று கருதப்பட்டு மற்றொரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

தற்போதையத் திட்டப்படி சத்ரா மலை இடுக்குக்குக் கீழே 30 மைலுக்கு அப்பால் அனுமான் நகரில் ஒரு 'பாரேஜ் அணை' கட்டப்படும்; அதன் இரு ஓரங்களிலும் வெள்ளத் தடைக் கரைகள் அமைக்கப்படும்; மறுகால் மதகுகள் மூலம் விநாடிக்கு 75 000 கன அடி தண்ணீர் வீதம் கோசியின் பழைய படுகைகளில் திருப்பிவிடப்படும்; இத்திட்டத்தின் மூலம் பீகாருக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

அனுமத் நகர் பாரேஜ் அணை சுமார் ஒரு மைல் நீளமிருக்கும்; 3 190 அடி நீளத்திற்கு மத்திய காண்வாய் (ஸ்பில்வே) இருக்கும். மதகுகளும் இருக்கும்; அந்த அணை பாலமாகவும் அமையும்.

ஜனநாயகப் போர்வையில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சாயத் தொழிலாளர்கள் ஏராளமாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர். வழி நெடுக சிறை மீண்ட தோழர் ஆதித்தன் அவர்களுக்கும், ஏனையோருக்கும், சொற்பொழிவாளர்களுக்கும், தொழிலாளர்களால், தாய்மார்களால் மலர்மாலைகள் சூட்டப்பட்டன. பிறகு கூட்டம் மாத்தூரில் அமைக்கப்பட்டிருந்த அழகிய மேடையில் நடைபெற்றது. துவக்கத்தில் தோழர் ஆதித்தன் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறி மாத்தூர் விவசாயிகளின் அறப்போரினையும், பெற்ற வெற்றியையும் விளக்கிப் பேசினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ